## 15 ஏக்கர்.. ஒரு போகம்… ரூ.4,74,000

## 10.02.2014

**அள்ளிக்கொடுக்கும் பாரம்பரிய ரகங்கள்!**

நானும் ரசாயன உரம், பூச்சிக்கொல்லி என்று பயன்படுத்தி கொண்டுதான் இருந்தேன். நம்மாழ்வார் ஐயாவுடைய அறிமுகம் ஆன பிறகுதான், இயற்கை விவசாயத்திற்கு மாறினேன். பசுமை விகடன் படித்துவிட்டு, அதில் தெரிந்துகொண்ட பலவித இயற்கை விவசாயத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தித்தான் விவசாயம் செய்கிறேன். அருமையான மகசூல் கிடைத்து கொண்டிருக்கிறது என்று சிலாகித்துச் சொல்கிறார், விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர், அருள்மொழி.

**வழிகாட்டிய நம்மாழ்வார் !**

எங்களுடைய பரம்பரை விவசாயக் குடும்பம். அப்பா வாத்தியார் வேலை பார்த்துக் கொண்டே, விவசாயமும் பார்த்தார். வீட்டில் மூன்று பெண்கள், நான் ஒரே பையன். பனிரெண்டாவது வரைக்கும் படித்தேன். அதற்குமேல் படிப்பு ஏறவில்லை. அப்பாகூட சேர்ந்து விவசாயம் பார்க்க வந்துவிட்டேன். தொடக்கத்தில் நல்ல விளைச்சல் இருந்தாலும், ரசாயன உரம் கொடுக்கும்போது விளைச்சல் குறைந்து கொண்டே இருந்தது. அதற்கேற்ற அளவுக்கு உரம், பூச்சிக்கொல்லி இதையெல்லாம் கூட்டும்போது, செலவு அதிகரிக்க ஆரம்பித்தது.

இந்தச் சூழ்நிலையில், இங்கு நடந்த ‘கபிலர் விழாவில்’ கலந்து கொண்டேன். அங்கு வந்திருந்த நம்மாழ்வார், ‘ரசாயன உரங்களைக் கொட்டி நிலம் கெட்டுப்போச்சு. அதில் விளையும் உணவும் விஷமாகத்தான் இருக்கிறது என்று விரிவாக பேசினார். அதைக் கேட்ட பிறகு, இயற்கை பற்றிய தேடலில் இறங்கினேன். தமிழ்நாடு முழுக்க நிறைய இயற்கை விவசாயப் பண்ணைகளுக்குப் போய், அவங்களுடைய விவசாயத் தொழில்நுட்பங்களைத் தெரிந்து கொண்டு, நானும் இயற்கை விவசாயத்தில் இறங்கினேன். அதனுடன் ‘ பசுமை விகடன்’ புத்தகம் சொல்லிக் கொடுத்த ஜீவாமிர்தம், மூலிகைப் பூச்சிவிரட்டி எல்லாவற்றையும் பயன்படுத்த ஆரம்பித்தேன் என்றார்.

**சென்ற வருடம் படித்தேன்.. இந்த வருடம் விதைத்தேன் !**

எனக்கு மொத்தம் 30 ஏக்கர் நிலமிருக்கு. ஆட்கள் பிரச்னையால் 15 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு விட்டுவிட்டேன். மீதி 15 ஏக்கரில் மட்டும்தான், விவசாயம். நான்கு கிணறு இருப்பதால் தண்ணீர் பிரச்னை இல்லை. ஆரம்பத்தில் ஆடுதுறை நெல் ரகங்களைத்தான் சாகுபடி செய்தேன். ‘பசுமை விகடனில் படித்துத் தெரிந்து கொண்ட பிறகு, ஐந்து வருடமாக சீரகச்சம்பா, வெள்ளைப் பொன்னி நெல் ரகத்திற்கு மாறிட்டேன். இதில் நல்ல மகசூல் கிடைக்கிறது. நல்ல விலையும் கிடைக்கிறது.
சென்ற வருடம்… பொங்கல் சிறப்பிதழில் ஐந்து ரகங்கள் சாகுபடி செய்யும் சுப்ரமணிய சிவா பற்றி

வந்திருந்தது. அவரிடமிருந்து சேலம் சன்னா, ஆத்தூர் கிச்சடி, மாப்பிள்ளைச்சம்பா விதைகளை வாங்கி, விதைத்தேன். அதோடு சீரகச்சம்பா, வெள்ளைப்பொன்னியும் சேர்த்ததில் இந்த வருடம் நானும் 5 நெல் ரகங்களை சாகுபடி செய்திருக்கிறேன். பன்னிரண்டரை ஏக்கரில் வெள்ளைப்பொன்னி, 50 சென்டில் ஆத்தூர் கிச்சடி, 50 சென்டில் சேலம் சன்னா, 90 சென்டில் சீரகச்சம்பா, 60 சென்டில் மாப்பிள்ளைச் சம்பா என்று நெல் பயிர் நிற்கிறது. சில ரகங்கள் விளைந்து அறுவடைக்கு தயாராக இருக்கு. சில ரகங்கள் அறுவடைக்கு வர ஒரு மாத காலமாகும் என்றார் அருள்மொழி.

ஒவ்வொரு ரகத்திற்கும் ஒவ்வொரு குணம் !

வெள்ளைப் பொன்னி நெல் ரகத்தின் வயது 145 நாட்கள். ஆத்தூர் கிச்சடி, சேலம் சன்னா மற்றும் சீரகச் சம்பா ஆகியவற்றின் வயது 135 நாட்கள். மாப்பிள்ளைச்சம்பா.. 160 நாட்கள். ஆத்தூர் கிச்சடி ரகம் சன்னமாகவும், சுவையாகவும் இருக்கும். இது சாதத்திற்கு ஏற்றது. சேலம் சன்னாவில், நெல் சிகப்பாக இருந்தாலும், அரிசி வெள்ளை நிறத்தில்தான் இருக்கும். சாக்கரைப்பொங்கல் செய்வதற்கு ஏற்ற ரகமிது. சீரகச்சம்பா வாசனையாகவும், சுவையாகவும் இருக்கும். பிரியாணி போன்ற உணவு வகைகள் சமைப்பதற்கு ஏற்றது. மாப்பிள்ளைச்சம்பா, உடலுக்கு வலிமை கொடுப்பதோடு, சர்க்கரை வியாதியைக் கட்டுக்குள் வைக்கும் குணம் கொண்டது.

**ஏக்கருக்கு 15 கிலோ விதை !**

நாற்றங்கால் அமைக்க, ஏக்கருக்கு 10 சென்ட் என்ற கணக்கில் நிலத்தை ஒதுக்க வேண்டும். 10 சென்ட் நிலத்தில் ஒரு மாட்டுவண்டி தொழுவுரத்தைக் கொட்டிக் களைத்து, தண்ணீர் கட்டி, மூன்று சால் உழவு செய்து சமப்படுத்திக் கொள்ள வேண்டும். 20 கிலோ மண்புழு உரத்துடன், தலா 200 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ – பாக்டீரியா, 100 கிராம் சூடோமோனஸ் ஆகியவற்றைக் கலந்து, நாற்றங்காலில் தூவ வேண்டும். ஏக்கருக்கு 15 கிலோ விதைநெல் தேவைப்படும். விதையை தண்ணீரில் 36 மணி நேரம் ஊற வைத்து, மூன்றாம் கொம்பு விதையாக... காலை நேரத்தில் நாற்றங்காலில் தண்ணீர் நிறுத்தி பாவ வேண்டும். மாலையில் தண்ணீரை வடித்து, ஐந்து நாட்களுக்கு காய விட்டால் முளைப்பு எடுத்துவிடும். பிறகு, உயிர் தண்ணீர்விட வேண்டும். தொடர்ந்து வாரம் ஒரு முறை தண்ணீர் கட்ட வேண்டும். 7-ம் நாளில் 25 லிட்டர் அமுதக்கரைசலைத் தண்ணீரில் கலந்துவிட வேண்டும். 12-ம் நாளில் 5 கிலோ கடலைப்பிண்ணாக்கை தண்ணீரில் ஊற வைத்து, 20 கிலோ தொழுவுரத்துடன் கலந்து தூவ வேண்டும். பூச்சித் தாக்குதல் இருந்தால், 12 லிட்டர் தண்ணீருக்கு, 500 மில்லி மூலிகைப் பூச்சி விரட்டியைக் கலந்து தெளிக்கலாம். (ஏக்கருக்கு 10 டேங்க் பிடிக்கும்). 18-ம் நாளில் நாற்று தயாராகிவிடும். 22-ம் நாளுக்குள் பறித்து நடவு செய்துவிட வேண்டும்.

**வளர்ச்சியைக் கூட்டும் உயிர் உரங்கள்!**

நாற்று தயாராகும்போதே நடவு நிலத்தையும் தயார் செய்ய வேண்டும். தேர்வு செய்த ஒரு ஏக்கர் நிலத்தில், பலதானிய விதைப்பு செய்து, பூ எடுத்ததும் மடக்கி உழவு செய்து, ஆட்டுக்கிடை கட்ட வேண்டும். பிறகு,

சேற்று உழவு செய்து நிலத்தை சமப்படுத்திக் கொள்ள வேண்டும். செறிவூட்டப்பட்ட 500 கிலோ மண்புழு உரக்கலவையைத் தூவ வேண்டும் (500 கிலோ மண்புழு உரம், தலா இரண்டு கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ – பாக்டீரியா, ஒரு கிலோ சூடோமோனஸ் ஆகியவற்றைக் கலந்து 7 நாட்கள் வைத்திருந்தால், செறிவூட்டப்பட்ட மண்புழு உரம் தயார்). தொடர்ந்து வழக்கமான முறையில் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். காய்ச்சலும், பாய்ச்சலுமாக தண்ணீர் கட்டினால் போதும். 20-ம் நாளில் களை எடுத்து… செறிவூட்டப்பட்ட 500 கிலோ செறிவூட்டப்பட்ட 20 கிலோ மண்புழு உரக்கலவையைத் தூவ வேண்டும் (20 கிலோ மண்புழு உரம், தலா இரண்டு கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ –பாக்டீரியா, ஒரு கிலோ சூடோமோனஸ் ஆகியவற்றைக் கலந்து 7 நாட்கள் வைக்க வேண்டும்). 25-ம் நாளிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் பஞ்சகவ்யா, மீன் அமிலம், பூச்சிவிரட்டி என மாற்றி மாற்றித் தெளிக்க வேண்டும். (டேங்கின் அளவு 12 லிட்டர், பஞ்சகவ்யா எனில் ஒரு டேங்குக்கு 300 மில்லி. மீன் அமிலம் எனில், ஒரு டேங்குக்கு 150 மில்லி. பூச்சிவிரட்டி எனில், ஒரு டேங்குக்கு 750 மில்லி. ஏக்கருக்கு 10 டேங்குக் தேவைப்படும்). அறுவடை வரை தொடர்ந்து இவ்வாறு செய்து வர வேண்டும். இதையும் மீறி பூச்சித்தாக்குதல் இருந்தால், இஞ்சி-பூண்டுக் கரைசல் தெளிக்கலாம். பெரும்பாலும், பாரம்பரிய ரகங்களில் பூச்சிகள் வருவதில்லை. வெள்ளைப் பொன்னி, 100-ம் நாளுக்கு மேல் கதிர் பிடித்து, 125-ம் நாளுக்கு மேல் கதிர் முற்றத் துவங்கி145-ம் நாளுக்கு மேல் அறுவடைக்கு வந்துவிடும். ஆத்தூர் கிச்சடி, சேலம் சன்னா மற்றும் சீரகச் சம்பா ஆகிய ரகங்கள், 90-ம் நாளுக்கு மேல் கதிர் பிடித்து 115-ம் நாளுக்கு மேல் முற்றத் துவங்கி, 135-ம் நாளுக்கு மேல் அறுவடைக்கு வந்து விடும். மாப்பிள்ளைச்சம்பா, 110-ம் நாளுக்கு மேல் கதிர் பிடித்து, 140-ம் நாளுக்கு மேல் முற்றத் துவங்கி, 160-ம் நாளுக்கு மேல் அறுவடைக்கு வந்துவிடும்.

**ஒரு போக வருமானம் ஏழே முக்கால் லட்சம் !**

பன்னிரண்டரை ஏக்கர் நிலத்தில் 312 மூட்டை (75 கிலோ) வெள்ளைப் பொன்னி ரக நெல் கிடைக்கும். இதை அவித்து அரிசியாக்கினால், 14 ஆயிரம் கிலோ அரிசி கிடைக்கும். கிலோ 45 ரூபாய் வீதம் விற்பனை செய்தால், 6 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். 90 சென்ட் நிலத்தில் 20 மூட்டை சீரகச் சம்பா நெல் கிடைக்கும். இதை பச்சரிசியாக அரைத்தால் 900 கிலோ கிடைக்கும். ஒரு கிலோ அரிசி 70 ரூபாய் என்று விற்பனை செய்தால் 63 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். அரை அரை ஏக்கரில் தனித்தனியாக இருக்கும் ஆத்தூர் கிச்சடி, சேலம் சன்னா ரகங்களில் தலா 12 மூட்டைகள் கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறேன். மொத்தம் 24 மூட்டைகள் கிடைக்கும். இதை அவித்த அரசியாக்கினால் 1,080 கிலோ அரிசி கிடைக்கும். இதை கிலோ 50 ரூபாய் என்று விற்பனை செய்தால், 54 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். 60 சென்ட் நிலத்தில் இருக்கும் மாப்பிள்ளைச்சம்பாவில் 10 மூட்டை நெல் கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறேன். இதை அவித்து அரிசியாக்கினால், 450 கிலோ அரிசி கிடைக்கும். கிலோ 60 ருபாய் என்று விற்பனை செய்தால், 27 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். ஆக மொத்தம், 15 ஏக்கரிலிருந்து 7 லட்சத்து, 74 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். ஏக்கருக்கு 20

ஆயிரம் ரூபாய் செலவு என்று வைத்துக் கொண்டால், 15 ஏக்கர் நிலத்திற்கும் சேர்த்து 3 லட்சம் ரூபாய் மொத்த செலவு. அதைக் கழித்தால்... 4 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் லாபமாக கிடைக்கும். ஒரு போகத்திற்கு 31 ஆயிரம் ரூபாய் லாபம்.

மதிப்புக்கூட்டி அரிசியாக விற்பனை செய்தால்தான் இந்த லாபம். இதையே நான் நேரடியாக விற்றால் லாபம் குறையும். அதே போல் ரசாயன உரம், பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தினால்... இன்னும் லாபம் குறையும் என்றார்.

**தொடர்புக்கு**

அருள்மொழி,

செல்போன் : 94873 81043

**ஆதாரம் : பசுமை விகடன் வெளியீடு 10.02.2014 www.vikatan.com**